[1990 ஏப்ரல் 10

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குற்றாலத்திலே குளிப்பதைத் தவிர வேறு பொழுதுபோக்கு ஒன்றுமில்லை. ஆகவே திருக்குற்றலாத்திலிருந்து ஐந்தருவி வரையிலே சென்று வருவதற்கு சிறுவர்கள் இரயில் ஒன்று விடப்படுமா? இரண்டாவதாக, சீசன் காலத்திலே, 3 மாதங்களுக்கு ஒலி-ஒளிக் காட்சியை அங்கே அமைக்கும் உத்தேசம் அமைச்சரவர்களுடைய சுற்றுலாத் துறைக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற 5 அருவிகளில், ஏனைய அருவிகளையும் சேர்த்துச் சொல்கிறேன், சிற்றருவி, லோயர் பால்ஸ் ஆகிய அனைத்து அருவிகளிலும் குளித்தாலே நேரம் போய்விடும். அதற்குமேலே ஒலி-ஒளிக் காட்சி அமைக்கும் திட்டம் இப்போது இல்லை. சிறுவர் இரயில் விடும் திட்டமும் இப்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறன்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய குற்றாலம் பகுதிகளிலே தங்குவதற்கான குடில்களும் இல்லை, தங்குகின்ற விடுதிகளும் இல்லை. ஆகவே குளிக்கப் போகின்றவர்களுக்கு இங்கே தங்குகின்ற விடுதிகளையும், குடில்களையும் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகின்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: அவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று, நிச்சயமாக அந்த வசதிகள் அங்கே செய்து தரப்படும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்ந்த, வனப்புடன் விளங்கிய சிறுவர் பூங்காவானது ஒளி இழந்து பராமரிக்கப்படாமல் இருக்கிறது. அது சீரமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

9-35 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுவர் பூங்கா சுற்றுலாத் துறையினுடைய பராமரிப்பில் இல்லை. நகரியத்தினுடைய பராமரிப்பில் இருக்கலாம் என்று கருதுகின்றேன். அது பற்றி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தான் பதில் அளிக்க வேண்டும் என்று கருதுகிறேன்.

சுற்றுலா மையம்.

* *4526*—திரு. மு. இராமநாதன்:

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 10]

(அ) கோவை மாவட்டம் உடுமலையை அடுத்துள்ள திருமூர்த்திமலை, பஞ்சலிங்கம் நீர்வீழ்ச்சிப் பகுதியை சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோவை மாவட்டத்தில் உடுமலையை அடுத்துள்ள திருமூர்த்திமலை பஞ்சலிங்கம் நீர்வீழ்ச்சிப் பகுதியை சுற்றுலா மையமாக ஆக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்காக ஏற்கெனவே 3 1/2 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமூர்த்திமலையில் பஞ்சலிங்கம் நீர்வீழ்ச்சியும், திருக்கோவிலும் இருக்கின்றது. நீண்டகாலமாக இது சுற்றுலா மையமாக அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இப்போது அமைச்சர் அவர்கள் $3\frac{1}{2}$ இலட்சம் ரூபாயை அதற்குப் பூர்வாங்கமாக ஒதுக்கீடு செய்து இருப்பதாகச் சொன்னார்கள். இது கோவை மாவட்டத்தில் ஒரு முக்கியமான இடம். ஆண்டுதோறும் இந்த நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்கு வரக்கூடிய மக்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடு இல்லாத காரணத்தினாலேயே தொடர்ந்து பலர் நீர்வீழ்ச்சியில் மூழ்கி இறந்துவிடுகிறார்கள். ஆகவே கூடுதலாக விடுதிகளைக் கட்டித் தரவும் சுற்றுலாப் பயணிகளுக்கு உண்டான நல்ல வாய்ப்புகளை உருவாக்கித் தரவும் அமைச்சர் அவர்கள் மேலும் பல வாய்ப்புகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மேலும் சுற்றுலா விடுதிகளைக் கட்டினால் அங்கே செல்கின்ற பயணிகள் அருவியிலே விழுந்து சாவதைத் தடுக்க முடியும் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அந்த இடத்தை நான் சென்று பார்த்து இருக்கிறேன். அது நல்ல இடம்; பசுமையான இடம். அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அவ்வப்போது விடுமுறை நாட்களிலே, வார இறுதியிலே, ஞாயிற்றுக்கிழமைகளிலே அங்கு சென்று தங்கி இருந்து கொஞ்ச நேரம் பொழுது போக்க வசதியான நல்ல இடம். ஆகவே அங்கு வருகின்ற பயணிகளுக்கு வசதியைச் செய்வதற்கு நிச்சயமாக வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். ஆனால் அந்த விபத்தைப் பொறுத்தவரையில், குளிக்கின்றபோது திடீரென்று அருவியிலே அதிகம் தண்ணீர் வந்து, வெள்ளம் வந்து அதன் காரணமாக சில விபத்துக்கள் ஏற்பட்டு மரணம் ஏற்படுகின்றது என்று நான் அறிகின்றேன். அதற்கு பொதுப்பணித்துறை மூலமாக அல்லது வனத் துறை மூலமாக செக் டாம் உயரமான அந்தப் பகுதியில் கட்டி, அதன் மூலமாக தண்ணீர் வருவதை ரெகுலேட் செய்தால் நிச்சயமாக அப்படிப்பட்ட விபத்துகளைத் தடுக்க முடியும் என்று நான் கருதுகின்றேன்.

**திரு. மு. இராமநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகள் குளிக்கும்போது திடீரென்று வெள்ளம் வந்தாலும் கூட எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் இருக்கின்றது. திருக் குற்றாலத்திலே கூட குளிப்பதற்கு அவர்களை வரிசைப்படுத்து வதற்கு தடுப்புச் சுவர்கள், பாதுகாப்பு ஏற்பாடுகள், உடை மாற்றுவதற்கு உண்டான ஏற்பாடுகள், தங்குவதற்கு விடுதி ஏற்பாடுகள் எல்லாம் இருக்கின்றது. ஆகவே திருமூர்த்தி மலையிலும் அதுபோன்ற ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பதை நான் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடத்தில் வலியுறுத்துகிறேன். அவர்கள் அண்மையில் அந்த இடத்தைப் பார்வையிட்டு இருக்கிறார்கள். மேலும் அறநிலையத் துறை அமைச்சர் பொறுப்பும் அவர்களிடத்திலே இருக்கின்ற காரணத் தினாலே பஞ்சலிங்கேஸ்வரர் திருக்கோயிலும் அங்கே இருக்கிறது; திருமூர்த்திமலை அணையும் அங்கே இருக்கிறது. நீர்வீழ்ச்சியும் அங்கே இருக்கிறது—ஆகவே கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்து எல்லா வாய்ப்புகளையும் உருவாக்கி அதை இரண்டாவது குற்றாலமாக உருவாக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் இருக்கிற குற்றாலத்திற்கு அடுத்து, கோவை மாவட்டத்தில் இன்னொரு குற்றாலம் இருக்கிறது. அதற்கு கோவைக் குற்றாலம் என்று சொல்வார்கள். ஆகவே நம்முடைய உறுப்பினர் அவர்கள் இரண்டாவது குற்றாலத்தை உருவாக்க வேண்டுமென்று சொல்வது கோவைக் குற்றாலத்தை உருவாக்க வேண்டுமா அல்லது திருமூர்த்தி மலையில் உள்ள— அருவியை மேம்படுத்த வேண்டுமா என்பதை நான் அவர்களிடம் இருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இருந்தாலும் கூட அங்கு வருகின்ற பயணிகளின் வசதிக்காக விடுதிகள் கட்டப்படும். அந்த அருவியில் வெள்ளம் வரும்போது அங்கே இருப்பவர்களை அடித்துச்செல்வதைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டப்படும் என் பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. யூ. கே. வெள்ளிங்கிரி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் அமைச்சர் அவர்கள் பேசும்போது குறிப் பிட்டார்கள்; திருமூர்த்தி நீர்வீழ்ச்சியைப் போன்று தான் தொண்டாமுத்தூர் தொகுதிக்கு உட்பட்ட கோவை சிறுவாணியில் கோவைக் குற்றாலம் என்று ஒரு நீர்வீழ்ச்சி இருக்கின்றது. கோவை மாவட்டத்திற்கு ஒரு பொழுது போக்கும் இல்லாத சூழ்நிலையில் அதை முதலிலே செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS